**தலைப்பு 160 – சுற்றாடல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 ஆம் பகுதி | - | அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை |
| 2 ஆம் பகுதி | - | ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை |

## 1 ஆம் பகுதி

**சுற்றாடல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 283 | வனவள பாதுகாப்புத் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,474,186,458 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இதில் ரூபா 2,651,537,957 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 751,216,899 மற்றும் ரூபா 71,431,601 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில்

முறையே 35.9 சதவீதம் மற்றும் 5.24 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **தலைப்பு** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள்** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| 160 | 2,110,716,458 | 1,359,499,559 | 751,216,899 | 35.59 |
| 283 | 1,363,470,000 | 1,292,038,398 | 71,431,602 | 05.24 |
| மொத்தம் | **3,474,186,458** | **2,651,537,957** | **822,648,501** | **23.68** |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

வனவள பாதுகாப்புத் திணைக்களத்தால் 2013 ஆம் ஆண்டின் போது இரண்டு வருமானக் குறியீடுகளின் கீழ் ரூபா 1,210,000,000 கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 960,700,732 கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 79 சதவீதமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| **வருமானக் குறியீடு** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக குறைவு** |
|---|---|---|---|---|
| | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **உள்ளபடியான வருமானம்** | **மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் சேகரிக்கப்பட்ட வருமானத்திலுள்ள குறைவு** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| 1003:07:03 | 65,000,000 | 56,743,886 | 8,256,886 | 12.70 |
| 2002:01:02 | 1,145,000,000 | 903,956,846 | 241,043,154 | 21.05 |
| **மொத்தம்** | **1,210,000,000** | **960,700,732** | **249,300,040** | **20.60** |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 16001 | 7,500,000 | 6,389,875 | 5,600,000 | 8,470,429 | 45,000,000 | 24,982,212 |
| 28301 | 75,000,000 | 59,440,212 | 45,000,000 | 63,341,899 | 301,000,000 | 237,787,858 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளின் மீதி ரூபா 510,361 ஆக இருந்தது.

### 2.4.2 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,080,854 ஆகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| சுற்றாடல் அமைச்சு | 6000/000/00/0015/0070 | 6,744,538 |
| வனவள பாதுகாப்புத் திணைக்களம் | 6000/000/00/0015/0138 | 24,336,316 |
| | | ------------------ |
| **மொத்தம்** | | 31,080,854 |
| | | ========== |

## 2 ஆம் பகுதி

### ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 160 – சுற்றாடல் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சுற்றாடல் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 13 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும்.

அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிப்பதிவேடுகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சுற்றாடல் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களின் (அ) முதல் (ஈ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) ஏற்பாட்டிற்கு மேலான பொறுப்புகளுக்கு உட்படல்

12 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் நிதியேற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பின் கூட்டுத்தொகை ரூபா 1,106,359 ஆகக் காணப்பட்டது. இச் சேமிப்பு ரூபா 8,353,122 தொகையால்

அதிகரிக்கப்பட்டு ரூபா 9,457,481 தொகையான பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தது.

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 18 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 356,875,000 தொகையான மொத்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 36 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் அச் செலவின விடயங்களுக்குரித்தான ஏற்பாட்டைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு தேறிய ஏற்பாட்டில் 51 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையான வீச்செல்லையைக் கொண்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

2014 ஏப்ரல் 30 ஆம் திகதி அளவில் அமைச்சால் தீர்க்கப்பட்டிராத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 510,361 ஆகக் காணப்பட்டது. இதில் ரூபா 260,361 தொகையான மீதி 2007 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவந்த தொகையாகும்.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

16001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் படி, அன்றைய தினத்தில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 337,470 தொகையானதுடன் அந் நிலுவை மீதிகளிலிருந்து அறவீடுகளின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இது 2013 சனவரி 17 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் இயந்திர உபகரணங்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் நிலவிவருவது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் நிலவிய காலம் |
|---|---|---|
| மல்டி மீடியா உபகரணம் | 01 | 01 வருடம் |
| மடிக் கணனி | 02 | 01 வருடம் 02 மாதங்கள் |
| குளிரூட்டல் இயந்திரம் | 07 | 09 மாதங்கள் |

### (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சால் 05 வாகனங்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | வாகன விபரம் | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவகங்கள் |
|---|---|---|
| | ---------------------- | ---------------------------------------------------------------- |
| (i) | இசுசு டபிள் கப் வாகனம் | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு |
| (ii) | இசுசு டபிள் கப் வாகனம் | - மேற்படி - |
| (iii) | ரொயோட்டர் டபிள் கப் வாகனம் | - மேற்படி - |
| (iv) | ரொயோட்டா டபிள் கப் வாகனம் | புத்த சாசன மற்றும் சமய அலுவலகள் அமைச்சு |
| (v) | ரொயோட்டா டபிள் கப் வாகனம் | விளையாட்டுக்கள் அமைச்சு |

**(இ) ஏனைய நிறுவகங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

ஏனைய நிறுவகங்களுக்குச் சொந்தமான 03 வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி அமைச்சால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| | வாகன வகை | சொத்துக்களிற்கு சொந்தமான நிறுவகம் |
|---|---|---|
| (i) | பேர்ஜோ கார் | வனவள பாதுகாப்புத் திணைக்களம் |
| (ii) | சுபாரு ஜீப் | வனவள பாதுகாப்புத் திணைக்களம் |
| (iii) | ஜீப் | மீள் குடியேற்ற அமைச்சு |

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதிக்குரித்தான பொறுப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 1,144,325 ஆகக் காணப்பட்டன.

(ii) பொறுப்புப் பதிவேட்டில் ரூபா 95,380 தொகையான பொறுப்புகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | - | வாகன விபத்தொன்று ஏற்பட்டு ஒரு வாரத்தினுள் ஆரம்ப விசாரணை அறிக்கை வழங்கப்பட வேண்டிய போதிலும், வாகன விபத்திற்கு உட்பட்டு 03 மாதங்களின் பின்னர் அவ் அறிக்கை வழங்கப்பட்டிருந்த துடன் விபத்து நேர்ந்து 04 மாதங்கள் கடந்திருந்த போதிலும் குறித்த இறுதி அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 237 | 280,909 | வாகனப் பழுதுபார்ப்பின் போது திருப்திகரமாக வேலை பூர்த்தியடைந்தமைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சான்றிதழொன்றைப் பெற்றுக் |

| | | |
|---|---|---|
| | | கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 756 | அமைச்சின் வாகனம் தொடர்பாக ஓர் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 756(4) மற்றும் 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 353 (5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) கைதவிர்க்கப்பட்ட வாகனங்கள் கட்டாயமாக பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருக்க வேண்டிய போதிலும் 08 ஆண்டுகள் பழைமைவாய்ந்த 02 வாகனங்கள் கைதவிர்க்கப்பட்டிருந்தன.<br><br>(ii) முன்னைய ஆண்டுகளின் போது ஓட்ட நிலையில் இல்லாத மற்றும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிராத வாகனங்கள் மாத்திரம் கைதவிர்ப்பிற்காகப் பெயரிடப்பட வேண்டிய போதிலும் 05 கைதவிர்க்கப்பட்ட வாகனங் களில் 04 உம் 2012 ஆம் ஆண்டின் போது ஓடிய மற்றும் பழுதுபார்க்கப்பட்ட வாகனங்களாகும். |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்

-----------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2008 யூன் 26 ஆம் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2012 ஒக்டோபர் 08 ஆம் திகதிய பீடீ/ஏ/ஏ01பீசீ ஆம் இலக்க நிதி அமைச்சுச் சுற்றறிக்கை | - | ரூபா 30,000 படி மாதாந்தம் எரிபொருள் படிப்பணம் பெற்றுக்கொள்ளும் ஓர் உத்தியோகத்தர் குழு வாகனத்தையும் பயன்படுத்தி யிருந்தார். |
| (ii) | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | அமைச்சிடம் இருந்த 33 வாகனங்களில் அரச இலட்சினையும் அமைச்சின் பெயரும் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. |

(இ) அரச கொள்வனவு வழிகாட்டல் கைநூல்

-------------------------------

| | | |
|---|---|---|
| 2.14.1 வழிகாட்டி | - | ‘‘மிஹிகத்த’’ தினத்தைக் கொண்டாடுவதற்காக ரூபா 565,500 தொகையான கொள்வனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அக் கொள்வனவுகளுக்காக முத்திரை யிடப்பட்ட விலைக்கோரல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 செயற்திட்டத்தை அமுற்படுத்துவதில் உள்ள நலிவுகள்

-----------------------------------------------------------------------------------------

செயற்திட்டத்தை அமுற்படுத்துவதிலுள்ள தாமதம் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(அ) தொம்பே சுகாதாரப் பாதுகாப்புக் கழிவுப் பொருள் நிரப்பல் நில செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் முடிவுறுத்தப்பட்டு

பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2014 மே மாதமே பூர்த்தியடைந்திருந்தன. எவ்வாறெனினும், 2014 செப்தெம்பர் வரையிலும் இது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொம்பே சுகாதாரப் பாதுகாப்புக் கழிவுப் பொருள் நிரப்பல் நில செயற்திட்டப் பகுதிக்குச் செல்லும் வீதி நிர்மாணிக்கப்படுவதற்கு ரூபா 69.5 மில்லியன் தொகையான ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான ஆய்வின் போது ரூபா 22.26 மில்லியன் தொகையான மிகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 8.15 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. வீதி நிர்மாணிப்புப் பணிகள் முறையான தரத்தில் மேற்கொள்ளப்பட்டிராமை 05 இரசாயன அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதிலும் அவற்றைத் திருத்திக் கொள்வது தொடர்பாக கவனம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய இரசாயனத் துறையை நாளதுவரையாக்கும் செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின் சனவரி மாதமளவில் முடிவுறுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை அமுற்படுத்தும் திட்டம் 2014 மார்ச் 10 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொருளாதார ஒருங்கிணைப்பு நிதியத்தின் கடன் வசதிகளின் கீழ் திண்மக் கழிவுப் பொருள் அகற்றல் வசதி நிர்மாணிப்புச் செயற்திட்டத்தின் (EDCF) பதவியணி 2012 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்டு செயற்திட்ட உடன்படிக்கை 2013 யூலை 23 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 02 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் திட்டமிடப்பட்ட 04 நில நிரப்பல்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் செயற்திட்டத்தின் திரண்ட செலவினத்தில் 64 சதவீதமான ரூபா 11,028,095 தொகையான கிரயம் செயற்திட்ட அலுவலகத்திற்காக ஏற்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட 04 நில நிரப்பல்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 02 ஆண்டுகளாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2008 முதல் 2010 வரையான 03 ஆண்டு காலப்பகுதியின் போது பூர்த்திசெய்யப்படுவதற்கிருந்த ‘‘பிளிசரு செயற்திட்டம்’’ இற்காக திறைசேரியால் ரூபா 5.633 பில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஆகஸ்ட் இறுதி வரை பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5.633 பில்லியன் தொகையில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1.965 பில்லியன் அதாவது 35 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(ii) சிறிய அளவிலான 103 சேதனப் பசளைத் தயாரிப்பகங்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் இதில் 69 மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இந் நிர்மாணிப்புகளில் 31 தயாரிப்பகங்களைத் தயாரிப்பதற்கு 31 உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு ரூபா 66.73 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் இதில் 13 நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் 03 தயாரிப்பகங்கள் கைவிடப்பட்டிருந்தன. நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த 69 தயாரிப்பகங்களில் 14 இல் சேதனப் பசளை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிராததுடன் ஏனைய தயாரிப்பகங்கள் உச்ச அளவில் பசளை உற்பத்தி செய்யத் தவறியிருந்தன.

(iii) செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பாரிய அளவிலான 14 சேதனப் பசளை தயாரிப்பகங்களில் 06 நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 248.7 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாரிய அளவிலான 03 சேதனப் பசளை தயாரிப்பகங்கள் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது செயற்பாட்டு நலிவுகள் காரணமாக தோல்வியுற்றிருந்தன.

(iv) உக்கலடையாத கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 10 நில நிரப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதில் ஒரு இடமும்

ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் ஒதுக்கப்பட்டிருந்த தொகையில் ரூபா 163 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தற்காலிக மண் நிரப்பலுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

## 1.8 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டின் செயலாற்றல் திட்டத்தின் படி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத பிரதான செயற்பாடுகள்

அமைச்சின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள்.

(i) பின்வரும் ஒவ்வொரு பிரிவிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள், குறித்த செயற்பாடுகளுக்காக செலவிடப்படாது முற்றாக சேமிக்கப்பட்டிருந்தன.

| பிரிவு | மொத்த ஏற்பாடு | செயற்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| | ரூபா | |
| நிலைபெறுதகு அபிவிருத்தி பிரிவு | 3,739,125 | 19 |
| காலநிலை மாற்றற் பிரிவு | 2,710,000 | 18 |
| வாயு நிலை முகாமைத்துவ பிரிவு | 14,006,000 | 31 |
| உயிரியல் பல்வகைமை பிரிவு | 17,767,650 | 43 |

(ஆ) ஏற்பாடுகளில் 50 சதவீதத்திற்கும் குறைவாகப் பயன்படுத்தல்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் பின்வரும் பிரிவுகளில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 50 சதவீதத்திலும் அதிகமாக சேமிக்கப்பட்டிருந்தன.

| பிரிவு | செயற்பாடுகளின் எண்ணிக்கை | மொத்த ஏற்பாடு | செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| நிலைபெறுதகு அபிவிருத்தி பிரிவு | 15 | 9,087,000 | 1,755,615 | 7,331,385 |
| நிலைபெறுதகு சுற்றாடல் பிரிவு | 05 | 6,000,000 | 1,744,000 | 4,256,000 |
| காலநிலை மாற்றற் பிரிவு | 06 | 1,425,000 | 406,481 | 1,018,519 |
| வாயு நிலை முகாமைத்துவ பிரிவு | 07 | 1,045,000 | 319,697 | 725,303 |
| கூட்டுத்தொகை | | 17,557,000 | 4,225,793 | 13,331,207 |

(இ) பிரதான நடவடிக்கைகளுக்கு முரணான செயற்பாடுகள்

அமைச்சு அதன் நோக்கங்களுக்கு உரித்தான செயற்பாடுகளுக்கு மாறாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் தெரிவுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த சம்மேளனத்திற்காக ரூபா 181,155 தொகை செலவிடப்பட்டுள்ளது.

(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வனவள மற்றும் சுற்றாடல் விஞ்ஞான கற்கைப் பிரிவின் மூலம் நடாத்தப்படும் ஓர் கூட்டத்திற்காக ரூபா 1,000,000 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஓசோன் படலத்தைப் பாதுகாப்பது தொடர்பான அறிவூட்டல்

ஓசோன் படலத்தைப் பாதுகாப்பது தொடர்பான அறிவூட்டல் தேசிய ஓசோன் பிரிவின் பிரதான நோக்கான போதிலும் நாடெங்கிலும் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் நடாத்தப்படும் இடம் மற்றும்

இலக்கிடப்பட்ட குழுக்களை இனங்காணல், செயற்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் உபசாரச் செலவினங்கள் மற்றும் வசதிகளை வழங்குதல் தொடர்பாகப் பொதுத் திட்டமொன்றைத் தயாரித்திராததுடன் சிக்கனம் இன்றி அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 100,000 முதல் ரூபா 400,000 வரையான வீச்சில் செலவினங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(உ) வேறு செலவின விடயங்களிற்கு எதிராக சுற்றுலாச் செலவினம்

அமைச்சர் மற்றும் அமைச்சுச் செயலாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டு சுற்றுலாவிற்காக அமைச்சருக்காக ஒதுக்கப்பட்டிருந்த செலவின விடயத்திற்கு மேலாக ரூபா 82,000 செலவிடப்பட்டிருந்தது.

## 1.9 நட்டங்களும் இழப்புகளும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட நட்டங்களும் இழப்புகளும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) வாகனம் ஒன்று பழுதுபார்ப்பதற்காக குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த கேள்வியாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிராமையால் ரூபா 71,400 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 08 சந்தர்ப்பங்களின் போது நேர்ந்த ரூபா 1,470,953 தொகையான இழப்புகளை அறவிட்டுக்கொள்வதற்கு அல்லது இழப்பை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட சிக்கனமின்றி ஏற்பட்டிருந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

தேசத்திற்கு மகுடம் காட்சிக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக விலைகள் கோரப்படுவதற்கு ரூபா 320,443 தொகை செலவிடப்பட்டு பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் விலை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு செலசினே நிறுவகத்திற்கு அச் செயற்பாடு

ஒப்படைக்கப்பட்டமையால் பத்திரிகை விளம்பரத்திற்காக ஏற்கப்பட்ட செலவினம் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணி தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 55 | 24 | 31 |
| (ii) | மூன்றாம் நிலை | 38 | 35 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 183 | 127 | 56 |
| (iv) | ஆரம்ப நிலை | 76 | 57 | 19 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | 0 |
| | **கூட்டுத்தொகை** | **353** | **244** | **109** |

மீளாய்வாண்டின் இறுதியில் 109 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வேறு தரப்பினரிடம் பெற்றுக்கொண்ட மனித வளங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ஊழியர்கள் இருவரும் சாரதி ஒருவரும் அமைச்சின் அலுவலகத்தின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இரு ஊழியர்களுக்காகவும் 07 மாதங்களுக்காக ரூபா 284,030 தொகையும் சாரதிக்காக 10 மாதங்களுக்காக ரூபா 408,225 தொகையும் அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 2. தலைப்பு 283 – வனவள பாதுகாப்புத் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வனவள பாதுகாப்பு நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்

கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிப்பதிவேடுகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இதன் (அ) முதல் (உ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமையால் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | குறித்த பிரமாணங்கள் |
|---|---|
| பொது வைப்புப் பட்டியல் | நிதிப் பிரமாணம் 571 (1) |
| நிலையான சொத்துப் பதிவேடு | திறைசேரிச் சுற்றறிக்கை 842 – 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய இல.ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### (ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(i) வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரித்தற்ற 49 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத காலம் தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தேவையான

தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக அவ் வாகனங்களில் 12 வாகனங்களுக்கு உரித்தான பதிவுச் சான்றிதழ்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக 2013 சனவரி 01 ஆம் திகதிய ரீஎம்/ஐ/வனச/வி.அ.தொ/2013 ஆம் இலக்க எனது கடிதத்தில் தகவல்கள் விசாரிக்கப்பட்டதுடன் 2013 செப்தெம்பர் 11 ஆம் திகதி இது தொடர்பாக ஞாபகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இது தொடர்பான தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீட்டு முரண்**

11 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 10 சதவீதத்திலிருந்து 56 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**(ஈ) வருமானக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்குகளின் பிரகாரம் ரூபா 711,472,671 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் இந் நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரித்தானவையாகக் காணப்பட்டன. அந் நிலுவை வருமானம் அறவீட்டின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) வருமானக் குறியீடு 20:02:01:02 கொண்ட அரசாங்க வனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் வருமானக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்

கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- கணக்கின் படி மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த நிலுவை வருமானம் ரூபா 710,594,987 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை வருமானத்திற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற வேண்டிய பெறுவனவாக ரூபா .706,610,519 தொகையும், நுவரெலியா பிரதேசத்தின் வன அலுவலகத்திலிருந்து ரூபா 2,464,768 தொகையும் பொலன்னறுவை அலுவலகத்திலிருந்து ரூபா 1,294,100 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

- நிலுவை வருமானத்தில் 2009 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் ரூபா 2,500 தொகையும் 2011 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 50,000 தொகையும் உள்ளடங்கியிருந்ததுடன் அந் நிலுவை வருமானத்தை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வன பாதுகாப்பு திணைக்களத்தின் புத்தகங்களின் படி அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பெறுவனவுத் தொகை மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனக் கணக்குகளின் படி வன பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பணத்திற்கும் இடையே ரூபா 45,047,889 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் இதனைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வருமானக் குறியீடு 10:03:07:03 கொண்ட தனியார் மரப் போக்குவரத்து வருமானக் கணக்கின் படி, மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 877,685 தொகையான நிலுவை வருமானம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டில் ரூபா 1,137,051 தொகையான நிலுவை

வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 260,166 தொகையால் அதாவது 22 சதவீதத்தால் மாத்திரம் குறைவடைந்திருந்தது.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

28301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அன்றைய தினத்திற்கு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,993,003 தொகையானதுடன் அந் நிலுவை மீதிகளை அறவீட்டின் பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இது 2013 மார்ச் 14 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு உள்ளகக் கணக்காய்வாளரும் ஒரு கணக்காய்வு உத்தியோகத்தரும் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 2009 யூன் 09 ஆம் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் போதிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கணக்காய்வுப் பிரிவிற்காக ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும், இலங்கை முழுவதும் வலய, மாவட்ட மட்டத்தின் வன அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,216 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. உள்ளகக் கணக்காய்விற்காக போதிய பதவியணி ஈடுபடுத்தப்பட்டிராமையால்

அவ் ஏற்பாட்டைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆக்கபூர்வமான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தால் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற துப்பாக்கிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒன்பது துப்பாக்கிகள் உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படாது விளைவற்று களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) பதிவு செய்யப்பட்டு, காவலாளி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த துப்பாக்கிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வலயக் காரியாலயங்களிலும் மாவட்ட வனக் காரியாலயங்களிலும் 124 துப்பாக்கிகள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளல்

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் அவ் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தலைமைக் காரியாலயம், உப காரியாலயம் மற்றும் 107 சுற்றுலா விடுதிகளின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2014 மே 31

ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வேறு நிறுவகத்திடம் உள்ள சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

---

ஏனைய 10 அரசாங்க நிறுவகங்களிற்குச் சொந்தமான 49 வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

---

திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைவான காலமாக நிலவிவரும் தீர்க்கப்படாத பொறுப்புகளின் அளவு ரூபா 1,681,446 ஆகக் காணப்பட்டது.

## 2.6 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| 1951 இன் 17 ஆம் இலக்க வாகன கட்டளைச்சட்டத்தின் 99 ஆம் பிரிவு | - | வாகனம் ஒன்று பயணிப்பதற்காக ஆகக் குறைந்தது மூன்றாம் நபர் காப்புறுதி இருக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வேண்டியதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளதுடன் 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய பீஎப்437 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலமும் அத் தேவைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் ------------------------------------- | | | |
| | (i) | நிதிப் பிரமாணம் 128(1)(உ) | கணிப்பிடப்படவில்லை | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள சொத்துக்கள் பாதுகாப்பான முறையில் வைத்துக் கொள்ளப்பட்டு காப்புறுதிக்காக போதியளவிலும் முறையான வகையிலும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக கணக்களிப்பு உத்தியோகத்தர் பொறுப்புக்கூற வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) | நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(1) | 24,336,316 | வைப்புச் செய்யப்பட்ட நாள் முதல் 2 ஆண்டுகளுக்குள் உரிமை கோரப்படாத வைப்புக்கள் காலாவதியான வைப்புக்களாகக் கருதப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் வைப்புக்கள் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 104(1) | கணிப்பிடப்படவில்லை | திணைக்களத்தில் நேர்ந்திருந்த சில இழப்புகள் தொடர்பாக இழப்புக் கணிப்பிடப்பட்டு இதற்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் நிச்சயிக்கப்பட்டு குறித்த அதிகாரிகளுக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் 90 விடயங்களுக்கு உரித்தான நட்டங்கள் தொடர்பாக அவ்வாறு பொறுப்புவாய்ந்தவர்களுக்கு 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 104(3) | கணிப்பிடப்பட்டிருக்கவில்லை | இழப்புகளும் நட்டங்களும் தொடர்பாக முழு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு 07 நாட்களுக்கு மேலான காலம் செல்லும் எனக் கருதும் சந்தர்ப்பத்தில் பூர்வாங்க அறிக்கை ஒன்று அனுப்பிவைக்கப்பட வேண்டும் என 02/2007 ஆம் இலக்க திணைக்களச் சுற்றறியின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இழப்புகளும் நட்டங்களும் தொடர்பாக பூர்வாங்க அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு நீண்ட கால தாமதம் ஏற்பட்டிருந்தது. |

**2.7 வங்கிக் கணக்குகளை பேணலிலான குறைபாடுகள்**

---

**வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரித்தலிலான நீண்ட தாமதம்**

---

01 வங்கிக் கணக்கிற்கு உரித்தான 2013 ஆகஸ்ட் மாதம் முதல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று 2014 யூலை 14 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

---

திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) பொலித்தீன் பைகளின் கொள்வனவு

---

திணைக்களத்தால் வருடாந்த பொலித்தீன் பொதிகளின் தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டிருக்கவில்லை. இதன் படி, 2013 ஆம் ஆண்டில் பொலித்தீன் பொதிகளின் தேவைப்பாடு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 2,000,000 ஆன போதிலும், 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 99 மில்லியன் தொகை செலவிடப்பட்டு தனியார் நிறுவகங்கள் இரண்டிலிருந்து 8,716,000 பொலித்தீன் பொதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விலைக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து ஒரு தனியார் நிறுவகத்திடமிருந்து 3,921,000 பொலித்தீன் பொதிகள் கொள்வனவு செய்யப்பட்டதை அடுத்து மீள விலை கோரப்படாது அக் கம்பனியிடமிருந்து மேலும் 1,125,000 பொலித்தீன் பைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) மற்றைய தனியார் கம்பனியிலிருந்து 3,670,000 பொலித்தீன் பொதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதில் 670,000 பொதிகள் விலை கோரப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் பொருட்கள் கட்டளையிடப்படுகையில் இதற்காக நியாயமான காரணங்கள் வழங்கப்பட்டுள்ளமைக்கு கணக்களிப்பு உத்தியோகத்தர் தனிப்பட்ட ரீதியில் திருப்தியடைய வேண்டிய போதிலும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு பொலித்தீன் பொதிகள் மேலதிகமாகக் கொள்வனவு செய்கையில் இது தொடர்பாக கவனம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மேற்குறித்த கொள்வனவுகளின் போது வழங்குனர்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிராததுடன் செயற்பாட்டு முறிகளும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமைக் காரியாலயத்தில் பயிர்கள் மற்றும் வெளியீடுகள் விற்பனை நிலையத்தைச் சுற்றி வேலி அமைத்தல்

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மேம்பாட்டு அலுவலகத்தின் பயிர்கள் மற்றும் வெளியீடுகளின் விற்பனை நிலையத்தைச் சுற்றி வேலி நிர்மாணித்து ஓர் கதவை அமைக்கும் நடவடிக்கைகள் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படாது அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டு இதற்காக ரூபா 733,612 தொகை அரச மரக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இந் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்டதை அடுத்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு தேவையான விதத்தில் ஒப்பந்தத்தின் மதிப்பீடு மாற்றப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டிராததுடன் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தாலும் இது தொடர்பாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திடம் காரணங்கள் விசாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முதலாவது மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 05 செயற்பாட்டு விடயங்கள் அகற்றப்பட்டு மேலதிக மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தால் ரூபா 733,612 இற்கு அவ் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டு கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் முடிவடைவதற்கு 04 நாட்கள் இருக்கையில் 2013 மே 03 ஆம் திகதி கொள்வனவுக் குழுவிடமிருந்து கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குழுவால் ஒப்பந்தக்காரரால் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதை அடுத்து அதாவது 2013 மே 31 ஆம் திகதி கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(v) மேற்குறித்த வேலி மற்றும் கதவின் நிர்மாணிப்புச் செயற்பாடு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படுவதற்கு கொள்வனவுச் சபையின் அங்கீகாரம் 2013 மே 21 ஆம் திகதியே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது வரையில் அந் நிர்மாணிப்புகள் பூர்த்தியடைந்து ஒப்பந்தக்காரருக்கு இறுதிக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(vi) ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித பதிவேடும் பரீட்சிக்கப்படாது சிரேஷ்ட வனப் பாதுகாப்பாளர் (சமூக வன விஞ்ஞான மற்றும் வன விருத்தி) யின் 2013 மே 03 ஆம் திகதிய SF & E /04/ தவான், நபிர.கா/08/2013 ஆம் இலக்க கடிதம் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(vii) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் நிர்மாணிப்புகள் தொடர்பான அளவீட்டுப் பட்டியல்கள் பரீட்சிக்கப்படாது கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமும் அரசாங்க மரக்

கூட்டுத்தாபனத்தின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு 2013 யூன் 28 ஆம் திகதி ரூபா 733,612 தொகை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.9 நட்டங்களும் இழப்புக்களும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) வாகனங்கள் மற்றும் ஏனைய நட்டங்களும் இழப்புக்களும்

இழப்புகள் ரூபா 25,000 இற்குக் குறைவான 34 நிகழ்வுகளும், இழப்புகள் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட 56 நிகழ்வுகளுமாக 90 நிகழ்வுகள் 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படாது நிலவியதுடன் இதில் சில நிகழ்வுகள் இழப்புகள் ஏற்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்தன. எனினும், இவ் இழப்புகளையும் நட்டங்களையும் தீர்ப்பதற்காக உடனடி நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகன விபத்துக்கள்

வாகனங்கள் விபத்துக்களுக்கு உட்பட்டிருந்தமையால் நேர்ந்திருந்த நட்டங்களில் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 162,474 தொகையாகவும் ரூபா 230,380 தொகையாகவும் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பதிவழிக்கப்படுவதற்கு கைதவிர்ப்பதற்கு அல்லது அறவிடப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிராத வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 76 ஆகக் காணப்பட்டது. 64 வாகன விபத்துக்கள் தொடர்பாகக் கணிப்பிடப்பட்ட நட்டங்களின் பெறுமதி ரூபா 6,189,544 ஆகக் காணப்பட்டது.

**2.10 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வு பந்திகள்**

வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரித்தான கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினாப் பந்திகளின் பின்தொடர் நடவடிக்கைகள் தீர்க்கப்பட்டிராத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அறிக்கையின் தொடர்பு | | தொடர்பு விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2008 | 4.3(ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கின் கடன் மீதியை அறவிட்டுக்கொள்வதில் பின்தொடர் நடவடிக்கைகளிலுள்ள நலிவுகள் |
| 2009 | 4.3(ii) | |
| 2010 | 1.3(ஈ) (i) | |
| 2011 | 1.3(ஊ) | |
| 2012 | 1.3(உ) | |
| 2010 | 1.21(ஊ) | சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2011 | 1.11(க) | |

## 2.11 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுப் .பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தின் கள உத்தியோகத்தர்களின் ஆடைப் பயன்பாடு

கள உத்தியோகத்தர்களிற்காக வடிவமைக்கப்பட்ட சீருடைகளுக்காக 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 13,137,541 தொகையும் ரூபா 7,152,926 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் திணைக்கள உத்தியோகத்தர்களின் அச் சீருடை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்படாது 2013 ஆம் ஆண்டிற்காக கள உத்தியோகத்தர்களின் சீருடைக்காக ரூபா 13,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 10,318,221 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) வன விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்கான சீருடை வழங்கப்படாமை

-----------------------------------------------------------------------------------------

கள உத்தியோகத்தர்களிற்காக சீருடை வடிவமைக்கப்பட்டிருந்த போதிலும், வன விஸ்தரிப்புத் துறையில் முக்கிய செயற்பாட்டையும் வனப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பொதுமக்களுக்கிடையில் கொண்டு செல்கையில் பாரிய செயற்பாட்டை மேற்கொள்ளும் வன விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்கு சீருடை ஒன்றை வடிவமைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அவசர அழைப்புச் சேவைக்கு (தொலைபேசி இல. 1991 இற்கு) கிடைக்கும் மோசடி முறைப்பாடுகள் தொடர்பாக திணைக்களத்தின் பணி

-----------------------------------------------------------------------------------------------------------------------

அவசர அழைப்புச் சேவை மூலம் வன மோசடி தொடர்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(i) அமைச்சின் அவசர அழைப்புச் சேவைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த வன மோசடிக் முறைப்பாடுகளில் பெரும்பாலானவை பாதுகாக்கப்பட வேண்டிய மரங்களை வெட்டுதல், அனுமதியற்ற மரத்தறிப்பு, கருங்கல் உடைத்தல் போன்றனவாகும். அம் முறைப்பாடுகள் வனப் பாதுகாப்பாளருக்கும் இதனை அடுத்து பிரதான பிரதி வனப் பாதுகாப்பாளர் (பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம்) திடீர் சுற்றிவளைப்புப் பிரிவிற்கும் அதனை அடுத்து மாவட்ட வன காரியாலயத்திற்கும் அனுப்பிவைக்கப்படுதற்காக ஆகக் குறைந்தது பத்து நாட்களுக்கு மேலான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

(ii) 2013 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை மாவட்ட வன காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த 79 முறைப்பாடுகளில் 30 முறைப்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதில் கிடைக்கப்பெற்றிருந்த சில முறைப்பாடுகள் மாவட்ட வன காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு 8 மாதங்களுக்கு மேலான காலம் கடந்திருந்தது.

(iii) வன மோசடி தொடர்பாகக் கிடைக்கப்பட்டிருந்த சில முறைப்பாடுகள் தொடர்புபட்ட காரியாலயங்களுக்கு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அம் முறைப்பாடுகள் பரீட்சிக்கப்பட்டு அறிக்கையிடப்படுவதற்கு நீண்ட காலம் கடந்திருந்தது.

(iv) சுற்றாடல் மற்றும் மீள்சக்தி அணுசக்தி அமைச்சின் திடீர் சுற்றிவளைப்புப் பிரிவிற்குக் கிடைக்கப்பெறும் வன மோசடி முறைப்பாடுகள் தொடர்பாக திணைக்களம் உடனடி பரிசோதனைகளை நடாத்த வேண்டிய போதிலும் அம் முறைப்பாடுகள் தொடர்புடைய மாவட்ட வனக் காரியாலயத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டு இது தொடர்பாக பரீட்சிப்பதற்கு நீண்ட தாமதம் ஏற்பட்டிருந்தது. ஆகையால் வன மோசடி தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்குள்ள சந்தர்ப்பம் அற்றுப்போயிருந்தது. இதன் படி, 2013 ஆகஸ்ட் மாதமளவில் கிடைக்கப்பெற்றிருந்த 79 முறைப்பாடுகளில் ஒரு மோசடி மாத்திரமே கண்டறியப்பட்டிருந்தது.

(v) கீழே காண்பிக்கப்பட்டுள்ளவாறு கடந்த 04 ஆண்டு காலப்பகுதியில் அவசர அழைப்புப் பிரிவிற்குக் கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை பாரியளவில் குறைந்திருந்தது. இதன் படி, அவசர அழைப்புப் பிரிவு தொடர்பாக பொது மக்களிடையே நிலவும் நம்பிக்கை குறைவடைந்திருந்தது.

| **ஆண்டு** | **கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 2010 | 224 |
| 2011 | 220 |
| 2012 | 178 |
| 2013 ஆகஸ்ட் வரை | 79 |

(ஈ) துப்பாக்கிப் பயன்பாடு மற்றும் அறிக்கைகளை பேணல்

-----------------------------------------------------------------------------

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) தோட்டாக்கள் தொடர்பான காலாண்டு அறிக்கை

-----------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- திணைக்களத்தின் துப்பாக்கிப் பயன்பாடு தொடர்பாக வனப் பாதுகாப்பாளர் நாயகத்தினால் 2000 யூன் 08 ஆம் திகதிய 07/2000 ஆம் இலக்க திணைக்களச் சுற்றறிக்கையின் 16 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தராலும் பயன்படுத்தப்பட்ட தோட்டாக்கள் தொடர்பான விபர அறிக்கை ஒன்று மூன்று மாதங்களுக்கு ஒருதடவை மாவட்ட வன உத்தியோகத்தரால் குறித்த மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு காலாண்டின் பின்னர் வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் பாதுகாப்பு மற்றும் சட்ட செயற்பாட்டுப் பிரிவின் பிரதி வனப் பாதுகாப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும் 2013 திசெம்பர் 11 ஆம் திகதி வரையிலும் பொலன்னறுவை, கண்டி, குருநாகல், நுவரெலியா மற்றும் மாத்தறை மாவட்ட வன உத்தியோகத்தர்கள் முதல் காலாண்டுகள் 2 இற்காக மாத்திரம் அவ் அறிக்கைகளை அனுப்பியிருந்தனர். இதன் படி, 19 மாவட்ட உத்தியோகத்தர்களால் அச் சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றுவது மீறப்பட்டிருந்தது.

- அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கைகளில் குருநாகல் மாவட்ட வன உத்தியோகத்தர்கள் அனுப்பியிருந்த அறிக்கைகள் குறித்த மாதிரியின் பிரகாரம் இல்லாதிருந்ததுடன் தோட்டாக்கள் பயன்படுத்தப்பட்ட

தினங்கள், இடங்கள், காரணங்கள், வன மோசடிப் பிரிவு போன்றவை பதியப்பட்டிருக்கவில்லை.

- கண்டி மாவட்ட வன உத்தியோகத்தரின் பொறுப்பில் உள்ள 04 துப்பாக்கிகளின் தோட்டாக்களின் பயன்பாடு தொடர்பான விபரம் மூன்று மாதங்களுக்கு ஒருதடவை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii) செல்லுபடியாகும் காவலாளி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல்**

---

செல்லுபடியாகும் காவலாளி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

- 2000 யூன் 08 ஆம் திகதிய 07/2000 ஆம் இலக்க திணைக்களச் சுற்றறிக்கையின் முதலாம் பந்தியின் பிரகாரம் வனப் பாதுகாப்பாளர் நாயகத்தால் ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகும் வகையில் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் காவலாளி அனுமதிப்பத்திரம் இன்றி எந்த உத்தியோகத்தரும் கடமைத் துப்பாக்கி ஒன்றைப் பயன்படுத்தலாகாத போதிலும் மாவட்ட வன காரியாலயங்கள் இரண்டின் மூன்று உத்தியோகத்தர்கள் காவலாளி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாது துப்பாக்கிகளைப் பயன்படுத்தியிருந்தனர்.

- வவுனியா மாவட்ட வன காரியாலயத்திற்காக 2013 மே 10 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த 12 துளை வான்காட் வகையிலான 04 துப்பாக்கிகளுக்காக 2013 ஆம் ஆண்டிற்காக செல்லுபடியாகும் காவலாளி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2000 யூன் 08 ஆம் திகதிய 07/2000 ஆம் இலக்க திணைக்களச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின்

பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் காவலாளி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நடப்பாண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் வனப் பாதுகாப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படக்கூடிய வகையில் திசெம்பர் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் குறித்த நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் காவலாளி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு குறித்த ஆண்டின் ஐந்து மாதங்கள் தாமதமாகிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- 12 துளை வான்காட் வகையிலான ஓர் துப்பாக்கி 2012 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வின் போது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாததெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக 2013 ஆம் ஆண்டிற்காக காவலாளி அனுமதிப்பத்திரம் ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்தது.

(iii) துப்பாக்கி பதிவுசெய்தல்

-------------------------------

திணைக்களத்தின் துப்பாக்கி பதிவு செய்யப்படுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- 12 துளை கொண்ட 08 துப்பாக்கிகள் 1997 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 54,400 தொகை செலுத்தி அத் துப்பாக்கிகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதில் ரூபா 27,200 தொகை பதிவு செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அறவிடப்பட்ட தண்டப்பணமாகும்.

- பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட 30 துப்பாக்கிகள் பிரதான களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு வரை பயன்பாட்டிற்கு

எடுத்துக்கொள்ளப்பட்டிராத காலப்பகுதிக்காக அத் துப்பாக்கிகளுக்காக பதிவுக் கட்டணம் மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பழுதடைந்த துப்பாக்கிகள் கைதவிர்ப்பு

---

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் பழுதடைந்த மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத துப்பாக்கிகள் பொலிஸிற்கோ அல்லது பிரதேச செயலாளர்களுக்கோ ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 26 ஆம் திகதி வரையில் பிரதான களஞ்சியத்தில் 30 துப்பாக்கிகள் காணப்பட்டன. சில துப்பாக்கிகள் ஐந்து ஆண்டு காலமாக களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அவற்றைக் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(v) துப்பாக்கிப் பயிற்சி**

---

திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக துப்பாக்கிப் பயிற்சி வழங்கப்படுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- 2013 யூலை 20 ஆம் திகதி 21 ஆம் திகதி ஆகிய இரு தினங்களில் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் வனத் துறை உதவி உத்தியோகத்தர்களுக்கான துப்பாக்கிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. இப் பயிற்சிக்காக 40 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 119,920 தொகை களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், பயிற்சிக்காக 36 உத்தியோகத்தர்கள் மாத்திரமே கலந்துகொண்டிருந்தனர்.

- 2013 ஆம் ஆண்டின் போது துப்பாக்கிப் பயிற்சி 5 நிகழ்ச்சிகள் மாவட்ட வன உத்தியோகத்தர்களுக்கும் தள வன உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்டிருந்ததுடன்

பயிற்றப்படுவதற்கு தீர்மானித்த எண்ணிக்கையில் ஏழு பேர் பங்கேற்றிருக்கவில்லை. ஒவ்வொரு மாவட்ட வன உத்தியோகத்தர்/ தள வன உத்தியோகத்தருக்காக முறையே ரூபா 3,683 தொகையும் ரூபா 2,650 தொகையும் திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்த போதிலும் இத் துப்பாக்கிப் பயிற்சிக்காக உத்தியோகத்தர்கள் பங்கேற்றிராமை தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- துப்பாக்கிப் பயிற்சிக்காக உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையில் சகல உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி பெறும் வகையிலும் பயிற்சி தேவையான உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை பெறும் வகையில் வலயக் காரியாலயங்களில் அல்லது தள வன காரியாலயங்களிலிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப் பட்டமைக்கான சான்றுகள் அவதானிக்கப்பட்டிராததுடன் அண்மையில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் பயிற்சி வழங்குவதற்கு தொடர்புபடுத்துவதன் மூலம் இப் பயிற்சி போதியளவில் திட்டமிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(உ) **வாகனம்**

**-----------------**

திணைக்களத்திற்கு உரித்தான 219 வாகனங்களில் உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 04 வாகனங்கள் தவிர்ந்த ஏனைய எந்த வாகனத்திற்காகவும் காப்புறுதிக் காப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வாகன விபத்து மிக அதிகமாக உள்ள இக் காலப்பகுதியில் காப்புறுதிக் காப்பொன்று இன்றி வாகனம் ஓட்டப்பட்டு வாகன விபத்துக்களுக்கு உட்படுவதனால் மூன்றாம் நபருக்கு ஏற்படும் இழப்பும் அதில் பயணம் செய்யும் சாரதிகள் உட்பட உத்தியோகத்தர்களின் உயிருக்கு ஏற்படும் இழப்பு தொடர்பாகவும் கருத்திற்கொள்ளாது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) **கருங்கல் உடைத்தலும் செம்மண் அகற்றுதலும்**

திருகோணமலை மாவட்ட வன காரியாலயம், தள வன காரியாலயம் மற்றும் கந்தளாய் தள வன காரியாலயத்தால் கருங்கல் உடைத்து செம்மண் அகற்றப்படுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(i) செம்மண் அகற்றல்**

குருநாகல் மற்றும் கந்தளாய் தள வன காரியாலயத்தால் சிறு கற்கள் அகற்றப்படுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நகர மற்றும் கடவத் சதர பிரதேச செயலகப் பிரிவின் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திலுள்ள இலுப்பைக்குளம் வனப் பாதுகாப்பகத்தில் செம்மண்ணை அகற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த 09 செம்மண் கோருனர்களால் செம்மண் அகற்றப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் படி, குறித்த நிகரான புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அக் கோருனர்களால் மாவட்ட வன காரியாலயத்தில் வைப்பாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த பணம் பயன்படுத்தப்பட்டு அல்லது அதற்குச் சமனான வழமைக்குக் கொண்டுவரப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இச் செம்மண் அகற்றப்பட்டிருந்த இடங்களில் சமமான குழிகள் காணப்பட்டதுடன் மழை காலங்களில் இவ் இடங்களில் நீர் தேங்கிக் காணப்பட்டது. இது சுற்றாடலுக்கும் சமூகத்திற்கும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

- செம்மண் அகற்றுவதற்காக ஓர் இடம் வழங்கப்படுகையில் ஒவ்வொருவருக்கும் அண்மித்த இடங்கள் வழங்கப்படுவதன் மூலம் ஒவ்வொருவருக்கும் செம்மண் அகற்றுவதற்காக வழங்கப்பட்ட இடப்பகுதிகளை வெவ்வாறாக இனங்கண்டு கொள்ள முடியாதிருந்தது.

- செம்மண் வெட்டப்பட்டு போக்குவரத்திற்கான அனுமதி வழங்கப்படுகையில் வழங்கப்படும் ‘‘சீ’’ படிவப் பிரதிகள் கோவையிடப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் இருக்கவில்லை. ஆகையால் விநியோகிக்கப்பட்டிருந்த ‘‘சீ’’ படிவத்தின் பிரதி குறித்த கோவைகளுக்கு உள்ளடக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

- செம்மண் வெட்டப்படுவதற்காக சுற்றாடல் பரிந்துரை வழங்கப்படுகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி, இறுதி வெட்டப்படும் மட்டம் நேரடியாக இருக்கலாகாததுடன் குறுக்கு மற்றும் நெடுக்கு முகங்கள் 1:1 ஆன வகையில் இருக்க வேண்டிய போதிலும் செம்மண் வெட்டப்பட்ட பல இடங்களில் இறுதி வெட்டப்பட்ட பகுதி நேரடியாக இருந்த சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

- 2012 ஆம் ஆண்டின் போது கந்தளாய் தள சேருவில பகுதியில் சேருவில அரசாங்க வனத்தில் 1400 செம்மண் கியீப்கள் வெட்டப்பட்டு அகற்றப்படுவதற்கு ஓர் நபர் அனுமதி கோரியிருந்தார். இது தொடர்பாக பரீட்சிக்கையில் இதற்கு முன்னரும் 250 செம்மண் கியூப்கள் வெட்டப்பட்டு அகற்றப்படுவதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியின் படி செம்மண் அகற்றப்படுகையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவ் உடன்படிக்கைகளுக்கு முரணாக 6 அடியளவு ஆழத்தில் குழிகள் ஏற்படும் வகையில் செம்மண் அகற்றப்பட்டிருந்தன. இவ்வாறே குருவலஹேன பகுதியில் செம்மண் 1000 கியூப்கள் வெட்டப்பட்டு அகற்றப்படுவதற்கு மாத்திரம் பரிந்துரை இருக்கையில் முறையான அங்கீகாரம் இன்றி 200 – 220 செம்மண் கியூப் அளவிலானவை அகற்றப்பட்டிருந்ததுடன் செம்மண் அகற்றப்பட்ட இடங்களில் குழிகள் மூடப்பட்டு முறையான வகையில் நிலம் நிரப்பப்பட்டிருக்கவில்லை. முன்னாள் திருகோணமலை உதவி மாவட்ட வன உத்தியோகத்தரால் மாவட்ட வன உத்தியோகத்தருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டிருந்ததுடன் மாவட்ட வன உத்தியோகத்தரால் கந்தளாய் பகுதி வன உத்தியோகத்தரிமிருந்தும் தள வன

உத்தியோகத்தரிடமிருந்தும் 2012 யூன் 19 ஆம் திகதி விளக்கம் கோரப்பட்டிருந்தது. மாவட்ட வன உத்தியோகத்தரால் மீண்டும் 2012 ஆகஸ்ட் 30 ஆம் திகதி இது தொடர்பாக ஞாபகமூட்டற் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமாகிய 2013 செப்தெம்பர் 05 ஆம் திகதி வரையிலும் அவர்களால் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையில் II ஆம் பகுதி அரசாங்க உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படக்கூடிய தவறுகள் தொடர்பாக முதலாம் பட்டோலையில் 14 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட தவறாக அவதானிக்கப்பட்டது.

**(ii) கருங்கல் உடைத்தல்**

கந்தளாய் மற்றும் திருகோணமலை தள வன காரியாலயத்தால் கருங்கல் உடைப்பது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கந்தளாய் தளக்கு உரித்தான வெண்டிராசன் புர கந்தளாய் பாதுகாப்புப் பகுதியில் உள்ள கருங்கல் உடைக்கப்படுவதற்காக நிறுவகங்கள் மற்றும் 17 நபர்களுக்கு அவ்வப்போது அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அக் கற் குழிகளின் பௌதீக மெய்மையாய்வின் போது கற்குழிகள் மூன்றில் மாத்திரம் வேலை செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. அக் கற்குழிகள் மூன்றில் நாளாந்தம் கடமையாற்றுபவர்கள் தொடர்பான விபரம், நாளாந்தம் கற்குழிகளில் இருந்து விநியோகிக்கப்படும் கற்களின் அளவு, கிடைக்கப்பெற்ற வெடி மருந்து தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்ட அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. ஆகையால் வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரத்தின் படி குறித்த அளவிற்கு மாத்திரம் கருங்கற்கள் அகற்றப்பட்டனவா என்பது குறித்து உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

- பொலன்னறுவை தள வன காரியாலயத்திற்கு உரித்தான பாதுகாப்புப் பகுதியான கன்யா குளிகுஞ்சிமலையில் உள்ள கருங்கல்லால் அவ்வப்போது 350 கருங்கல் கியூப்கள்

உடைக்கப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, 350 கருங்கல் கியூப்களுக்காக தலா ஒரு கியூப்பிற்கு ரூபா 1,000 படி ரூபா 350,000 தொகை அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவரால் 1205 கருங்கல் கியூப்கள் உடைத்து அகற்றப்பட்டமைக்காக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இதன் படி, 855 கருங்கல் கியூப்களிற்காக அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 855,000 தொகை இழக்கப்பட்டிருந்தது.

## 2.12 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணி தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 44 | 41 |
| (ii) | மூன்றாம் நிலை | 42 | 30 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,383 | 977 | 406 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,609 | 1,218 | 391 |
| | **கூட்டுத்தொகை** | **3,119** | **2,269** | **850** |

மீளாய்வாண்டின் இறுதியில் 850 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவகம் தவறியிருந்தது.

(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள்

திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | எண்ணிக்கை | வேறு தரப்பினர் | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | தள வன உத்தியோகத்தர் | 01 | சுற்றாடல் அமைச்சு | 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை |
| (ii) | வன துறை உதவியாளர் | 04 | சுற்றாடல் அமைச்சு | மேற்படி |